Registered as a News Paper in Ceylon

P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி (1889) ஆவணி 28 ஆரம்பமான

வெள்ளி தோறும் வெளி வருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

தனிப்பிரதி: சதம் 1

[புத் - சூ அ] யாழ்ப்பாணம்:- மன்மத வருஷ சித்திரை மீ க உ வெள்ளிக்கிழமை ( 13 APRIL. 1956 ) [இல - உ

## ஸ்ரீ இராசகோபாலாச்சாரியர் பதவித் துறவு

ஸ்ரீ சி. இராசகோபாலாச்சாரியார் அவர்கள் தமது சென்னை அரசாங்க மேற்சபை அங்கத்துவப் பதவியைத் துறந்துவிட்டாராம். துறந்தமைக்குக் காரணம் எதுவும் அவர் கூறவில்லை.

## 22 மைல் நடந்து வீடு திரும்பிய பூனை

தொடங்கஸ்லந்தையைச் சேர்ந்த உடதபொலஎன்ற இடத்தில் சேவை செய்த அரசாங்க மருத்துவ அம்மையார் ஒருவருடைய வீட்டில் வசித்த ஒரு பூனை இரு குட்டிகளுடன் அந்த அம்மையார் மாற்றப்பட்ட புது இடமாகிய ஹந்துகஹ என்ற இடத்துக்குக் கொண்டுபோகப்பட்டது. முந்தி வசித்த இடத்தில் இருந்து அந்த இடம் 22 மைல் தூரத்திலுள்ளது. ஆனல் அந்தப் பூனை தன் தன்னுடைய இரு குட்டிகளுடன் பழைய இடத்துக்குத் திரும்பிப் போய்விட்டதாம்.

# இலக்கண சுவாமிகள்

## இலக்கண இலக்கியத்துடன் ஞான நூல் நன்கு பயின்றவர்

இவர் தில்லையில் இருக்கும் காலத்தில் தினந்தோறும் நடேசப் பெருமானை வழிபடுவார்கள். சைவானுட்டானம் சிறிதும் தவறாது செய்து கொள்வார்கள். ஒருவரோடும் அதிகம் பேசுவது கிடையாது. பெரும்பாலும் மௌனமாய் இருப்பார்கள். அங்கு வசிக்கும் நாளில் ஈசானியமடம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகளிடமும், ஸ்ரீ செல்லப்பாச் சுவாமிகளிடமும் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்தனர். இங்ஙனம் இவ்விளைஞர் திலகர் சுத்தாத்துவித சைவசித்தாந்த நைட்டிகப் பிரமச்சரிய வாழ்வை நாவலர் பெருமான் போல் அணுவளவேனும் தவறாது வாழ்ந்தவர்கள். பின்பு தவப்பெருஞ் செல்வராய்ச் சூரியனார் கோயிலாதீனம் சேர்ந்தார். அவ்வாதீனத்துக்கு மகா சந்நிதானமாயிருந்த ஸ்ரீ முத்துக்குமார தேசிக சுவாமிகளிடம் விசேட நிர்வாணதீட்சை பெற்று சிவ பூசாதுரந்தரராய் விளங்கினர். இவர் இயல்பில் துறவியாய் இருந்தபொழுதும் சந்நிதானம் விருப்பத்தின்படி மந்திரகஷாயமும் தரித்துக்கொண்டனர். தமது இயற்பெயரோடு "தம்பிரான்" எனும் அருள்நாமத்தையும் புனைந்து முத்துக்குமாரத்தம்பிரான் சுவாமிகள் என்னும் பெயரையும் பெற்றுக்கொண்டனர்.

பின்பு ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகளை ஞானசாரியராகக் கொண்டு தென்மொழிக் கரைகண்டு, வடமொழியையும் நன்கு கற்றுத் தெளிந்தனர். அதுவுமன்றித் தொல்காப்பியமாதி இலக்கண நூல்களிலும், சங்கப் பேரிலக்கண நூல்களிலும் மிகத் திறமை படைத்த செந்தமிழறிஞராகவும் விளங்கினர். இன்னும் ஞானநூல்களை யெல்லாம் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் தமது ஞானசாரியரிடம் கேட்டுத் தெளிவடைந்த வித்துவ சூளாமணியுமாயினர். இத்தகைய மாதவச்செல்வரை ஆதீனத்திற்கு மகாசந்நிதானம் சுவாமிகளாக்கினர். பின்பு சிலவருடம் சந்நிதானமாய்க் கடமையாற்றியபின் அதிலும் ஓர் வெறுப்புண்டாகி மகாதுறவியாய் விளங்கினர். பின் சந்நிதானம் பதவியையும் துறந்து அவ்விடத்திற்கு ஒருவரை நியமனம் செய்தனர். அதன் பின் மகாசந்நியாசியாய் யாத்திரைசெய்யத் தொடங்கினர். காசி தொடக்கம் இமயம் ஈருக யாத்திரை செய்து முன்போல் தில்லையம்பதியை அடைந்தார்.

இவரது சிவவேடத்தையும் இவரிடத்தில் அமைந்திருந்த சிவனடியாருக்குரிய இருபத்தொரு இலட்சணங்களையும் உணர்ந்த சைவப் பெரியோர்கள், இலக்கண சுவாமிகள் என இவரை அழைப்பாராயினர். இத்தகைய சுவாமிகள் அமைதியான வாழ்வையுடையவர்களாய்த் தில்லை நடராசப் பெருமானையே வணங்கிக் கொண்டு இருந்தார்கள்.

இங்ஙனம் தில்லையில்சுவாமிகள் இருக்கும் காலத்தில் ம. க. வேற்பிள்ளைப்புலவர் அவர்களுடைய தொடர்பும் ஏற்பட்டது. புலவர் அவர்கள் சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலைக்குத் தலைமையாசிரியராகக் கடமையாற்றிப் பலருக்கும் பாடம் சொன்னவர்கள்—தமிழ் நாட்டை நன்கு அறிந்தவர்கள். ஆதீன மடாதிபதிகளும் மதிக்கத் தகுந்த வகையில் சைவப் பெரும் செல்வராய் வாழ்ந்தவர்கள். இத்தகைய சைவப்பெரியாரோடு இலக்கணம் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள், அன்பு பூண்டு இனிது அளவளாவிப் பல்லாண்டு சிதம்பரத்தில் வாழ்ந்தனர். பின்பு புலவர் அவர்கள் சுவாமிகள் பற்றிய விபரங்களை யெல்லாம் நன்கு ஆராய்ந்தறிந்தனர். அதன்பின் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையி லுள்ள அவர் சகோதரர்களுக்குத் தெரிவித்தனர்.

அதுவுமன்றி இம்மா[...] வத்தோனை யாழ்ப்பாண[...] சுவாமிகள் என, தமிழ்நா[...] எங்கும் தெரிவித்தார்கள் தாம்பாடிய ஈழ மண்டல சதக நூலிலும் வியந்து பாடியுள்ளார்கள்.

இத்தவச்செல்வர் தம்மை வந்தடையும் அடியார்களுக்கெலாம் அவரவர் பெற்ற தீக்ஷை நிலைக்கேற்பப் போதிப்பார்கள். விசேட தீட்சை பெற்றவர்களுக்கே சித்தாந்த நூல்களைப் போதிப்பார்கள். சிலருக்கு ஞான நூல்களின் நுண் பொருள்களைப் போதிப்பார்கள். இதனையே இவர் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டவர். சிவனடியார் சபைகளில் மாத்திரம் தலைமை தாங்கிச் சில நிமி[...]டம் பேசுவார்கள். இத்தகைய மாதவச் செல்வரை யாழ்ப்பாண மக்கள் பலர் அறியார். துறவறத்திற்கே இவர் அணிகலனாக விளங்கினர். (வளரும்)

## பேரின்ப வாழ்வுக்கு குருவின் கிருபை

கடவுளின் கருணை மு[...]களை சீர்தூக்கிப் பார்த்து சரிபிழை சொல்ல நினைக்க வேண்டாம். சீர்தூக்கி பார்க்க நினைக்கும் உங்க[...] சிற்றறிவின்வழி வரும் இ[...] சிறுதொழிலை நீக்குவீர்களாக. இறைவன் திருவ[...]ளின்வழி பணிவுடன் நி[...]லுங்கள். உங்கள் இரு[...]யங்களைத் திறந்து உங்க[...] அன்பு முழுவதையும் அவ[...]பாற் செலுத்துங்கள். அ[...]ரே உண்மையாய் அ[...]பான ஒருவர். அவருடை[...] சர்வ வியாபகத் தன்மை[...]டன் நீங்கள் ஐக்கியப்பட்[...] நிற்கப் பழகிக்கொண்டுவ[...]வீர்களானல் நீங்களும் அ[...]ரும் ஒன்று யிருப்பதை[...] காண்பீர்கள். அவருடை[...] ஒளி பொருந்திய பிள்ளை[...]ளாயிருங்கள். அவர் உ[...]கள் அருள்நிறைந்ததாய[...] யிருப்பர். இவ்வித அ[...] புணர்ச்சியால்உங்கள் வா[...]க்கையை இனிமைப்படுத்[...] பெறுதற்கரிய பேரான[...]த்தை நிறைவாகப் பெ[...]வீர்களாக. இந்தவிதமான[...] அருட்செல்வத்தை அடை[...]தற்கு குருவின் கிருபையே[...] முதலிலும் இறுதியிலு[...] என்றும் வேண்டப்படுவதா[...]கும்.

— சுவாமி இராமதாச[...]

அரசியல் அலை

# பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்ததே!

## அடையாளம் தெரியாது மறைந்த ஐ.தே.க.!!

### தமிழினத்துக்குப் பழிசெய்தும் சிங்கள மக்களின் சந்தேகம்!!!

ஒன்றை நினைக்க அது இன்ஞென்றனது. சிங்களம் பேசும் வாக்காளர்களுக்கு மாயப்பொடி தூவி ஆதாவு பெற எண்ணிய ஐ. தே. க. அந்தோ பரிதாப நிலையில் வீழ்ந்து விட்டது.

தமிழ் மொழிக்குப் பழி செய்யக் கழனிக் கரையில் மாநாடு கூடிய மந்திரிமார்கள் எங்கே!

தமிழ்மொழியைத் தள்ளிவிடுங்கள் என்று பிரேரணை கொண்டுவந்த திரு. D. C. W. கன்னங்கரா எங்கே? ஆமோதித்த திரு. ஆனந்த திச அலுவிசு எங்கே?

சிங்களம் பேசும் வாக்காளர்கள் ஏன் இந்தக் கட்சியை ஒதுக்கினர்கள்? சந்தேகப் பேர்வழிகள் இவர்கள் என்று தென் இலங்கை மக்கள் தெளிந்தறிந்தபடியால்!

கொக்குவிலிற் கூறிய வற்றை இல்லையென்று பாராளுமன்றத்திலேகுறுக்குக் கேள்விக்குப் பதில் அளிக்கும் வேளையில் நாக்கூசாது மறுத்த சேர். கொத்தலாவலைக்கு வந்ததே மாருக்கவலை.

ஐ. தே கட்சிக் கோட்டை கொத்தளம் யாவும் பறிபோய் விட்டன. அதோடு தலைக்கொழுப்பும் போய்விட்டது.

தலைவலி மாற நெஞ்சுநோய் வந்திருக்கின்றதா

ஐ. தே. க. அச்சம் அகன்றுவிட்டது. ஆனல் (சிங்கள) மக்கள் ஐக்கிய முன்னணி தோன்றியிருக்கின்றது. பாம்பின் குட்டி பாம்பு அதன் குட்டி நட்டுவக்காலி என்றபடி ஒரே விதக் கொள்கையில் உள்ள இரண்டு கட்சிகளில் எது நல்லது என்று எவ்வாறு சொல்லது.

கொஞ்சந் தாமதஞ் செய்து சிங்களத்தை அரசகரும மொழி ஆக்கக் கொத்தலாவலை ஆட்சி நினைத்தால் சூட்டோடு சூடு அந்த நாளிலேயே அரசியற் றிட்டம் மாற்றி அமைக்க உறுதி செய்திருக்கின்றது பண்டாரநாயக ஆட்சி. அரசியற்பாதையில் யானை குறுக்கிட்டாலென்ன புலி முன் பாய்ந்தாலென்ன ஆபத்து ஆபத்துத்தான்.

திருச்சிற்றம்பலம்.

[வா]ழ்க அந்தணர் வானவர் ஆனினம்
[வீ]ழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
[ஆ]ழ்க தீயதெல்லாம் அரனாமமே
[சூ]ழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.


# இந்துசாதனம்

[யா]ழ். துர்முகி வூ சித்திரை மீ கஉ வெள்ளிக்கிழமை


## [புத்]தாண்டு போற்றுதும்

[மலர்ந்து] புலர்ந்த இப் புத்தாண்டிற் [அ]வனியிற் புன்மை இருட்கணம் [ஒழிந்]தொழிந்து போகட்டும் புனித அறிவு ஒளி [ப]ரவிடட்டும் புது வாழ்வு [பொலிந்து] பாலிந்தோங்கட்டும் போய்யும் [பொ]றாமையும் வழிவிலகி வாய்[மை]யும் மனத் தூய்மையும் [உ]ண்டாகட்டும்.

அகந்தை ஒழிந்து அகத்தில் [அ]ன்பு உண்டானால் அறிவு [ஒ]ளி விளங்கும் அவனியில் [ஆ]தரவான இன் சொல்லன்றி [வ]ன்சொல் முன்வராது.

மங்களமாக வந்துதித்த இந்[த]ப் புத்தாண்டில் மாநிலமும் [ம]க்களும் மனிதப் பண்பாட்டில் [மா]ண்புடன் அமைந்து பொலிவ[டை]ந்துத் தெய்வப்பணி செய்யும் உண்மைத் தொண்டர் படை உழைத்தல்வேண்டும். மேன்மை கோள் சைவநீதி விளங்கிட வேதநெறி நிற்போமாக.

திருச்சிற்றம்பலம்

[அ]ன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
[த]ன்னெறியேசர ணாதலின் ணமே
[இ]ந்நெறியேசென்றங் கடைந்தவர்க்கெலாம்
[ந]ன்னெறியாவது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்

## ஒன்றுனல் நன்று

பொதுத் தேர்தற் பொலிவும் பொழுது போக்கும் முடிவடைந்துவிட்டன. போற்றுவதும் தூற்றுவதும் குறைந்து போகின்றன. புதுப் பாராளுமன்றத்து அங்கத்தவர்கள் (தமிழ் பேசும்) பொதுவாக இப்பொழுது ஏற்பட்ட சூழ்நிலையில் என்ன செய்வதென்று ஆராய்ந்து ஆவன புரிய வேண்டிய காலந் தொடங்கியிருக்கின்றது.

சிங்கள மக்கள் ஐக்கிய முன்னணி செல்வாக்குப் பெற்றுத் தனிப்பட்டமுறையிலே பலமடைந்திருக்கின்றபடியால் அரசு அமைக்கும் பொறுப்பு திரு. பண்டாரநாயகாவைச் சார்ந்தது. இந்த முன்னணியிலே இயங்குகின்ற பழைய சமசமாசக் கட்சியினரும் சிங்கள பாஷாப் பெரமுனையாரும் மற்றையோரும் சிங்களத்தையே சிங்காசனத்தமைக்கும் சிந்தையுள்ளவர்கள் என்று தெளிவாக வெளியிட்டிருக்கின்ருர்கள். இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குட் சிங்களத்தை அரசவரிசை மொழியாக்கும் கட்சியின் ஆட்சியிலே தமிழ் பேசும் பதினெட்டங்கத்தவர்கள் எவ்வாறு நடந்துகொள்வார்களென்பது தான் இப்பொழுதெழுந்திருக்கும் கேள்வி. இந்தப் பதினெண்மரிலே கூட்டாட்சி கோருகின்றவர்களும் ஒற்றையாட்சியில் உரிமை கேட்கின்றவர்களும் இருக்கின்ருர்கள். கொழும்பு மத்தி புத்தளம் தொகுதிகளின் அங்கத்தவர்களின் அரசமொழிக் கொள்கைகளும் விபரீதமானவை. இவர்கள்ஒருமுகமான அரசியற்கொள்கை ஒன்றைத் தமிழனத்துக்காக வரைவிலக்கணஞ் செய்து பாராளுமன்றத்திலே உரைப்பதற்கு அடிப்படையானவித்தியாசமான நோக்கங்களுள்ளன. எனவே தமிழ் பேசும் ஐக்கிய முன்னணி ஒன்று உருவாய் வருதல் அத்தியாவசியமாயிருக்கினும் கொள்கை வேற்றுமைகள் இந்நோக்கம் கைகூடுவதற்கு மாறாக வமைந்துள்ளன என்பதை இப்பொழுதாவது அங்கத்தவர்கள் அறிந்துணர்வார்களேயானல் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குட் புதிய முதல்அமைச்சர் பண்டாரநாயக சிங்களத்தை அரசமொழி ஆக்குவதற்கு வழிவகுக்குமுன் தமிழ்மொழித் துரோகத்தைத் தடுப்பதற்காவது ஒன்றுகூடுவார்கள் என்று எதிர்பார்க்கிறேம். பேராபத்து நேரடியாயிருக்கின்றதா இல்லையா என்பதைப்பாராளுமன்றம் ஆரம்பமாகி இரண்டு மூன்று திங்களிலே யாவரும் அறிவார்கள். ஆபத்துத் தோன்றும் இக்காலத்து அனைவரும் ஒத்துழைத்தாலன்றித் தமிழ் பேசும் இனத்தின் கதியாதாகுமோ என்று நாம் எடுத்துக் காட்ட வேண்டியதில்லை. ஆகவே தமிழ் மொழியைத் தாயாகப் போற்றும் அத்தனை அங்கத்தவர்களுக்கும் நாம் ஒன்றுகூறுதும். கட்சிகள் அப்படியே தொண்டாற்றலாம், கொள்கைகள் மாற்றப்படாதிருக்கலாம். ஆனல் ஒருமொழி இயக்கத்தை எதிர்ப்பதற்கும், தமிழ் பேசும் இனத்தின் பிறப்புரிமைகளைக் காப்பாற்றுவதற்கும் ஒன்றுகூடி உழைத்தல் உங்கள் கடமை. வாக்காளர்கள் உங்கள்பால் வேண்டிக்கொண்டதும் அஃதே. தமிழ்த் தகைமைக்கும் இதுவே சாலப் பொருத்தமானது. இந்த உண்மையான உணர்ச்சி உங்கள் உள்ளத்தில் எழுமேயானல் எந்த அல்லலையும் தமிழ் பேசும் மக்கள் வென்றுவிடுவார்கள் என்பதற்கையமின்று.

### எங்கள் அறிவித்தல்

சைவப்பிரகாசயந்திரசாலையும், இந்துசாதனக் காரியாலயமும் வெள்ளிக்கிழமை **13 - 4 - 56** தொடக்கம் **19-4-56** வியாழக்கிழமை வரையும் புது வருடத்தின் பொருட்டு மூடப்பட்டிருக்குமென்றும் இவ் வெளியீடு நாலுபக்கமுடையதாயிருக்குமென்றும் இந்துசாதனத்தின் அடுத்த வெளியீடு வெளிவரமாட்டாது என்றும் அன்பர்களுக்கு அறியத்தருகின்றேம்.

—அதிபர்.

# கடைசி நாளிற் கட்சித் தலைவர்கள் வெற்றி

## திரு. பண்டாரநாயகவுக்கு பெருவாரி ஆதரவு

## திருவாளர்கள்: பொன்னம்பலம் வன்னியசிங்கம் சுந்தரலிங்கம் திருச்செல்வம் ஆதரவு பெற்றனர்

| | |
|---|---|
| **வெள்ளவத்தை கல்கிசை** | |
| டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்லவா (ந. ல. ச. ச. க.) | 16782 |
| எல். வி: குணரத்ன (ம. ஐ. மு.) | 11806 |
| எஸ். டீ. எஸ். ஜயசிங்கா (ஐ. தே. க.) | 10259 |
| **பண்டாரவளை** | |
| உவை. ஜி. ஜயசிங்க (ந. ல. ச. ச. க.) | 6825 |
| ஏ. டி. இரத்தினயக்கா (ஐ. தே. க.) | 2262 |
| ஜெருல்ட் எச். கொத்தலாவலை. (சுயேச்சை) | 1278 |
| **மாத்தறை** | |
| மகாநாம சமரவீர (ம. ஐ. மு) | 18571 |
| பண்டித குணவர்த்தன (ஐ. தே. க.) | 7342 |
| எச். பி. கௌரபாலா (க. மி.) | 4894 |
| **தண்டகமுவ** | |
| ஐ. எம். ஆர். ஏ. இறையகொல்லை (சு. ம. ஐ. மு) | 21704 |
| ஆர். பி. ரெக்காவ (ஐ. தே. க | 8537 |
| **அக்குரஸ** | |
| டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா (கமியூனிஸ்ட்) | 20867 |
| டி. சி. வனிகசேகரா (ஐ. தே. க.) | 14639 |
| **நீர்கொழும்பு** | |
| டாக்டர் ஹெக்டர் பெர்னண்டோ (ந.ல.ச.ச.க.) | 20892 |
| ரி. குவின்டன் பெர்னண்டோ (ஐ. தே. க) | 18212 |
| ரியூடர் பி. குணசேகரா (சுயேச்சை) | 4589 |
| **களுத்துறை** | |
| சூளமண்டல குணவர்த்தன (ந. ல. ச. ச. க.) | 14659 |
| ஊபாலி பத்துவந்தொடாவை (ம. ஐ. மு) | 13536 |
| பீ. ஏ. குரே, (ஐ. தே. க.) | 10551 |
| **காலி** | |
| டபிள்யூ. தகநாயக்கா (ம. ஐ. மு.) | 21971 |
| டபிள்யூ. டீ. எஸ். அபய குணவர்த்தன(ஐ.தே.க.) | 1.015 |
| **வெலிமடை** | |
| கே. எம். பி. இராஜரத்தின (ம ஐ மு) | 12336 |
| எம். பி. பம்பரப்பணவை (ஐ தே க) | 4318 |
| எம். டனிஸ்டர் பெரேரு (சுயேச்சை) | 770 |
| **மொறட்டுவை** | |
| மெறில் பெர்னண்டோ (ந ல ச ச க) | 19529 |
| எச். ஈ, பி, டீ, மெல் (ஐ தே க) | 11811 |
| சோமவீர சந்திரசிறீ (சுயேச்சை) | 6559 |
| எம், வி, பெரேரு (சுயேச்சை) | 2267 |
| **வெலிகாமம்** | |
| சி. பாணினி இலங்கக்கோன் (ம. ஐ. மு.) | 18648 |
| மொன்டேக்கு ஜயவிக்கிரமா ஐ. தே. க.) | 13659 |
| **நாத்தாண்டி** | |
| ஹியூ பெர்னண்டோ (சுயேச்சை) | 17607 |
| சர். அல்பேட் பீரிஸ் சுயேச்சை) | 14510 |
| **பெலியக்கை** | |
| டீ. ஏ. ராஜபக்ஸ (ம. ஐ. மு.) | 26215 |
| டீ. பி. அத்தப்பத்து | 10382 |
| **பிங்கிரியா** | |
| டி. பி. சுபசிங்கா (ம. ஐ. மு.) | 26,246 |
| பி. மல்லவராச்சி (ஐ தே. க. ) | 7,294 |
| **பாணந்துறை** | |
| திரு. லெஸ்லி குணவர்த்தன ந. ல. ச. ச. க.) | 29362 |
| திரு. டி. வி. டபிள்யூ. கன்னங்கரா (ஐ.தே.க.) | 11032 |
| **பத்தேகம** | |
| திரு. ஹென்றி அபயவிக்ரம ம. ஐ. மு.) | 18334 |
| திரு. எச். டபிள்யு. அமரசூரியா (ஐ. தே. க.) | 11083 |
| திரு. எம். வி. பி. டி. சில்வா | 3397 |
| **உடுகமை** | |
| திரு. டி. எஸ். குணசேகரா (ம.ஐ. மு.) | 12411 |
| திரு. நீல் டி அல்விஸ் (சுயேச்சை சோஷலிஸ்ட் | 10100 |
| திரு. டபிள்யூ. ஈ. டி. நாகவத்தை (ஐ. தே. க.) | 1737 |
| **அம்பாந்தோட்டை** | |
| திரு. லக்ஸ்மன் ராஜபக்ஸ (ம. ஐ. மு.) | 20931 |
| திரு வி. எப். டபிள்யூ எதிரி சூரியா ஐ. தே. க.) | 9377 |
| **அகலவத்தை** | |
| திரு. அனில்முனசிங்கா (ந. ல ச. ச. க.) | 20206 |
| டாக்டர். ஏ. டி. பி. ஏ. விஜேகுணவர்த்தன (ஐ. தே. க.) | 7487 |
| திரு. வி. டி. சந்திரசிங்கா (சுயேச்சை) | 1066 |
| திரு வி. டபிள்யூ. எச். டி. மெல் சுயேச்சை) | 353 |
| **அம்பலாங்கொடை பலப்பிட்டி (இரு ஸ்தானங்கள்)** | |
| திரு. எம். பி. டி. சொய்ஸா (ம. ஐ. மு.) | 45626 |
| **நாவலப்பிட்டி** | |
| ஆர். ஈ. ஜயதிலகா ம. மு. | 3 592 |
| எட்மண்ட் விஜசூரிய யு. என். பி. | 2961 |
| எஸ். மாரசிங்கா ல. ச. ச. க | 1,193 |
| **குருணாகலை** | |
| டி. பி. மொனகுலாமே (ம. மு.) | 18594 |
| டி, பி, வெலகெதர (யு, என், பி) | 10,239 |

தொடர்ச்சி 3ம் பக்கம்

### ஸ்ரீ பண்டாரநாயகவின் கொள்கை

ஸ்ரீ. எஸ். டபிள்யு ஆர். டி. பணடாரநாயகவே முதல் மந்திரி ஆவார் என்பது தேர்தல் முடிவுகளின்படி துணிபாயிற்று. அந்த நிலைமையில் அவர் தம்முடைய சில கொள்கைகளைத் தருணம் வாய்த்தவிடத்தில் வெளியிடுகின்ருர்

தோட்டங்கள் உட்பட வெளிநாட்டு முதல் ஈடுகளோ உள்நாட்டு முதல் ஈடுகளோ அரசாங்கத்தால் கைப்பறறப்படமாட்டா. அப்படிக் கைப்பற்றவேண்டிய தேவை ஏற்பட்டால் வேண்டிய நடவடிக்கை படிப்படியாகவே எடுக்கப்படும். அதுவும வேண்டிய நட்டஈடு கொடுத்தே செய்யப்படும் என்பது முதல் ஈடுபற்றி அவருடைய கருத்தாம்.

அரசாங்கத்தில் கைக்கூலி முதலிய ஊழல்கள் நேராயோ மறைமுகமாகவோ நிசழவிடாது தகித்தல் அரசாங்க சேவைபற்றி அவருடைய கருத்தாம். நாட்டுப் பொதுப் பாதுகாப்புப் பகுதி என்று ஒன்றுபுறபாயிருக்கவிடாது பாடிகாவலர் பகுதியுடன் இணைத்தல் மற்ருெரு எண்ணம். வெளிநாட்டுப் பட்டங்கள் வழங்கப்படுவதைத் தவிர்த்தல் முன்னரே அவருடைய கட்சிக் கொள்கையாயுள்ளதாம்.

தென்கிழக்கு ஆசிய பாதுகாப்பு இணைப்புப் போன்ற சபைகள் ஆபத்தானவை. பாதுகாப்பு என்பதே கொள்கையாயிருந்த போதிலும் பாதுகாப்பு எல்லையை மீறிப் போர்தொடுக்கும் செயல் எந்தக் கணத்தில் உண்டாகக் கூடுமோ என்று சொல்ல முடியாது என்று தென்கிழக்கு ஆசிய பாதகாப்பு இணைப்புச் சபைக்குப் பாதகமாக அவர் தமது கருத்தை வெளியிட்டுள்ளார்.

விசை வண்டிச் சேவை, கைத்தொழில் ஆதியவை தேசியமயமாக்குதல், சிங்களம் அரசகருமமொழி ஆதற்கு வேண்டிய நடவடிக்கை துரிதமாயெடுத்தல், மதுவிலக்கு, குதிரைப் பந்தயம் என்பவை பற்றி அறிக்கைகளை ஆராய்ந்து செயலாற்றுதல், மேற்சபையை நீக்குதல், இலங்கையைக் குடியரசாக்குதல் என்பவைபற்றி வருங்காலத்தில் ஆலோசித்தல் என்பவையும் அவருடைய கருத்துக்களாய் அறிய வருகின்றன.

கொழும்பு மத்திய பகுதி அபேட்சகர்களுள் ஒருவரான ஸ்ரீ எம்.எஸ். தேமிஸ் போட்டியிலிருந்து நீங்கிவிட்டார் என்று துண்டுப் பத்திரங்கள் வெளியிடப்பட்டனவாம். ஆனல் அவர் விடவில்லை என்ற உண்மை வெளிப்படுத்தப்பட்டபொழுது துண்டுப் பத்திரம் பரப்பிக்கொண்டிருந்த ஒருவர் சிறைக்காளானராம். ஸ்ரீ. தேமிஸ் இப்பொழுது போட்டியில் வெற்றிபெற்றுவிட்டார்.

# கடைசி நாளிற் கட்சித் தலைவர்கள் வெற்றி

(1ம் பக்கத்தொடர்ச்சி)

| | |
|---|---|
| எஸ், ஜி, வணிகசேகரா (கம்யூனிட் கட்சி) | 5,384 |
| **அத்தனகலை** | |
| எஸ், டபிள்யு, ஆர், டி, பண்டாரநாயக (ம, மு,) | 45,016 |
| ஏ, டபிள்யு, ஜி, செனிவிரத்ன (யு, என், பி) | 3,019 |
| ஐ, டின்வி சுயேச்சை | 621 |
| **தம்பதெனியா** | |
| ஆர், ஜி, சேனுயக்கா (சுயேச்சை) | 26,414 |
| ஏ, ஜி, பியதாசா யு, என், பி, | 1,507 |
| **கம்பளை** | |
| ஆர், எஸ், பெல்பொல (ம, மு) | 13143 |
| எம், டபிள்யு, ஆர், டி, சில்வா (யு, என், பி,) | 4,302 |
| ஆர், டி, ஏ, டி, லனரோஸ் (சுயேச்சை) | 859 |
| ஐ, பி, ராஜபக்ஸ (சுயேச்சை) | 208 |
| **மீரிகாமம்** | |
| ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன (ம, மு,) | 36, 93 |
| ஜே ஈ, அமரதுங்க (யு, என், பி,) | 10,896 |
| எச், பி, ஜயவர்த்தன (சுயேச்சை) | 399 |
| ஏ, ஏ, எஸ், டயஸ் (சுயேச்சை) | 375 |
| **டெடிகம** | |
| எம், ஹெரத் (ம, மு,) | 22816 |
| ஸ்ரீமதி விமலா கன்னங்கரா (யு என் பி) | 6,360 |
| டபிள்யு ஏ, முனசிங்க (சுயேச்சை) | 191 |
| **மதவாச்சி** | |
| எம், சேனநாயக ம, மு | 10,829 |
| எஸ், எச், மகாதிலுவெவ யு, என், பி, | 1269 |
| **அவிசாவளை** | |
| பிலிப் குணவர்த்தன ம. மு | 30070 |
| ஸ்ரீமதி குளோடா ஜயசூரியா யு என் பி | 7818 |
| எச், எம், எஸ், ஜயவர்த்தன சுயேச்சை | 528 |
| **காங்கேசன்துறை** | |
| எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழரசு | 14855 |
| எஸ். நடேசன் சுயேச்சை | 8,183 |
| வி. பொன்னம்பலம் கம்யூனிஸ்ட் | 4313 |
| **கோப்பாய்** | |
| வி. வன்னியசிங்கம் தமிழரசு | 12,804 |
| வி. அருளம்பலம் சுயேச்சை | 10,983 |
| **வவனியா** | |
| வி. சுந்தரலிங்கம் த. பா. மு. | 6853 |
| பி. தர்மலிங்கம் சுயேச்சை | 1856 |
| **பருத்தித்துறை** | |
| பி. கந்தையா கம்யூனிஸ்ட் | 14381 |
| எம் சிவசிதம்பரம் சுயேச்சை | 8,064 |
| கே. துரைரத்தினம் தமிழரசு | 5859 |
| **மன்னார்** | |
| வி, ஏ. அழகக்கோன் தமிழரசு | 6726 |
| சர். கந்தையா வைத்தியநாதன் சுயேச்சை | 4887 |
| வி. சிற்றம்பலம் த. பா. மு. | 1078 |
| **ஊர்காவற்றுறை** | |
| வி. ஏ. கந்தையா தமிழரசு | 16303 |
| ஏ. எல். தம்பிஐயா சுயேச்சை | 6599 |
| **வட்டுக்கோட்டை** | |
| ஏ. அமிர்தலிங்கம் தமிழரசு | 14937 |
| ஏ. வைத்திலிங்கம் கம்யூனிட் | 10850 |
| **யாழ்ப்பாணம்** | |
| ஜி. ஜி. பொன்னம்பலம் த. கா. | 8914 |
| டாக்டர் இ. எம். வி. நாகநாதன் தமிழரசு | 7173 |
| எம். கார்த்திகேசன் கம்யூனிஸ்ட் | 3239 |
| ஏ. விஸ்வநாதன் ல. ச. ச. க. | 2703 |
| **சாவகச்சேரி** | |
| வி. என். நவரத்தினம் தமிழரசு | 15952 |
| வி குமாரசாமி சுயேச்சை | 8677 |
| **மட்டக்களப்பு** | |
| எஸ் இராசதுரை தமிழரசு | 9300 |
| ஓ. சின்னலெவ்வை சுயேச்சை | 7124 |
| ஆர். பி. கதிர்காமர் த. பே மு. | 1296 |
| ஏ. தவராசா சுயேச்சை | 148 |
| **திருகோணமலை** | |
| என். ஆர். இராசவரோதயம் தமிழரசு | 7048 |
| ஜேம்ஸ். அப்புகாமி சுயேச்சை | 2965 |
| ஏ ஐ. இராசசிங்கம் சுயேச்சை | 2378 |
| **கல்முனை** | |
| எம். எஸ். காரியப்பர் தமிழரசு | 9464 |
| அப்துல் மஜீத் த பே, மு, | 6095 |
| பிரான்சிஸ் சேவியர் ல, ச ச க | 4249 |
| **மூதூர்** | |
| எம். ஈ. எச். முகமதலி சுயேச்சை | 10549 |
| ஏ. டபிள்யூ. அல்விஸ் சுயேச்சை | 1902 |
| **பட்டிருப்பு** | |
| எஸ். யு. எதிர்மனசிங்கம் த. பே. மு. | 9528 |
| எஸ். எம், இராசமாணிக்கம் தமிழரசு | 8422 |
| **பொத்துவில்** | |
| எம். எம், முஸ்தாபா தமிழரசு | 8355 |
| எம். ஐ. எம். அப்துல்மஜீத் த. பே. மு. | 4626 |
| எம். எப். அப்துல் ஜவாத் சுயேச்சை | 2944 |
| **கல்குடா** | |
| ஓ. எச். மாக்கான் மாக்கார் சுயேச்சை | 6719 |
| வி. நல்லையா த பே மு | 2025 |

# கிழக்கு மேற்குக் கொள்கை வேறுபாடு

இந்திய மக்களுடைய உயர்ந்த கருத்துக்களின் உருவங்களாய் அமைகின்றனர் இராமரும் சீதையும். பிள்ளைகள் யாவரும் விசேடமாகப் பெண்பிள்ளைகள் சீதையை வணங்குகின்றார்கள். ஒரு பெண் அடைய விரும்பும் அதி உன்னத குறிக்கோளானது சீதையைப் போலச் சகிப்புத் தன்மையுடனும் பக்தியுடனும் பரிசுத்தமாயிருப்பதாகும். இவர்களின் சரித்திரங்களை ஆராயும்பொழுது மக்கள் வாழ்வில் இந்திய மக்களுக்குள்ள உயர்ந்த குறிக்கோளுக்கும் மேல்நாட்டு மக்களின் உயர்ந்த குறிக்கோளுக்குமிடையிலுள்ள வித்தியாசத்தைக் காணலாம். இந்திய மக்களுக்கு சீதாபிராட்டியார் சகிப்புத் தன்மையில் முன்மாதிரியாய் விளங்குகின்றார்.

மேல்நாடு சொல்லுகின்றது செயலாற்றுக, செயலாற்றுவதனுல் உங்கள் ஆற்றலை அறியச் செய்க என்று. சகிப்புத் தன்மையால் உங்கள் ஆற்றலைக் காண்பியுங்கள் என்று இந்தியா சொல்லுகின்றது. ஒரு மனிதன் எவ்வளவு பொருளை உடையவனுகலாம் என்பதையும் அதை அடையும் வழியையும் மேல்நாடு காண்பிக்கின்றது. எவ்வளவு குறைந்த பொருளை உடையவனுய் வாழலாம் என்பதை இந்தியா விளக்குகின்றது.

— சுவாமி விவேகானந்தா

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. 11338

சுப்பையா அளகரத்தினம்
கொக்குவில் கிழக்கு
யாழ்ப்பாணம்
—வழக்காளி.

Vs

1. செல்லப்பா ஆறுமுகமும் பெண் அன்னலட்சுமி
2. கொக்குவில் கிழக்கு

—எதிரிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் 11338-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1956-ம் வருடம் வைகாசி மாசம் 26-ம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த கொக்குவிலில் காட்டுப்புலம் என்னும் காணி நி இ 9 குழி 15 3/8 இதில் தென்கிழக்குப் புறமாக நி இ 2 குழி 12½ நீக்கி மிகுதி நி. இ. 7 குழி 2 7/8

இதற்கு எல்லை கிழக்கு நீக்கப்பட்ட காணி பொன்னம்பலம் அப்பையாவுக்கும் பெண் தங்கம்மாவுக்குமுரிய ஆதனமும் கிராமக்கோடும் வடக்கு றேட்டு.

மேற்கு V. இராசரத்தினம் பெண் கண்மணியின் ஆதனம்.

தெற்கு கந்தையா பெண் ஆச்சிப்பிள்ளையின் ஆதனம்

இவை அடங்கலும்.

வ. அ. துரையப்பா,
யாழ்ப்பாணம்
29-3-56.

M. 365 13-4 56. (து. 100.

## புது வருடம்

பங்குனி 30-ந் திகதி வியாழக்கிழமை (12 - 4 - 56) மன்மத வருடம் நிறைவுறுகின்றது. அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமை (13-4-56) துர்முகி வருடம் தொடங்குகின்றது. அன்று அதிகாலையில் வருடப்பிறப்புக் கருமங்கள் செய்யப்பெறும். மருத்துநீர் வைத்து ஸ்நானம் செய்தபின் ஆலய வழிபாடாற்றிச் சூரிய பொங்கல் நடைபெறும். அதன்பின்பே புதுவருடப்பிறப்புக் கருமங்கள் நிகழும்.

இவ்வருடத்தின் பலன் கமத்தொழில் விருத்தியும் பிற்பகுதியில் அதிக மழையும் எனப் பொதுவாகக் கூறப்படுகின்றது.

மிக்கான துர்முகியில் வேளாண்மை யேறுமே
தொக்கமழை பின்னே சொரியுமே — மிக்கான
குச்சர தேசத்திற் குறைதீர வேவிளையும்
அச்சமில்லை வெள்ளையரிதாம்.

என்பது இவ்வாண்டுப் பலனைக் குறிக்கும் வெண்பாவாகும்.

| | |
|---|---|
| பீ. மாணிக்கவாசகர் தமிழரசு | 4555 |
| எஸ். சிவஞானம் சுயேச்சை | 188 |

### (தெரிவுசெய்யப்பட்டவர்களும் — கட்சிகளும்)

| | | |
|---|---|---|
| ருவான்வளை | டாக்டர் என், எம், பெரேரா | ல, ச, ச, க. |
| தெஹியோவித்த | எட்மன்ட் சமரக்கொடி | ல, ச, ச, க, |
| கம்பஹா | எஸ், டி, பண்டாரநாயக | மக்கள்முன்னணி |
| கோட்டே | பி, பி, ஆர், குணவர்த்தன | ல, ச, ச, க, |
| மீரிகாமம் | ஸ்ரீமதி விமலா விஜயவர்த்தன | ம, மு, |
| களனி | ஆர், ஜி, சேனநாயக | சுயேச்சை, |
| டெடிகம | எம். ஹெரத் | மக்கள் முன்னணி |
| மதவாச்சி | எம். சேனநாயகா, | ம. மு. |
| அவிசாவளை | பிலிப் குணவர்த்தன | ம. மு. |
| நாவலப்பிட்டி | ஆர். ஈ. ஜயதிலகா | ம. மு. |
| குருணுகலை | டி. பி மொனகுலமே, | ம. மு. |
| அத்தனகலை | எஸ் டபிள்யூ ஆர். டி. பெண்டாரநாயகா | ம மு |
| தம்பதெனியா | ஆர் ஜி. சேனுயக்கா | சுயேச்சை |
| கம்பளை | ஆர். எஸ். பெல்பொல, | ம. மு. |

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. MB/564

கனகசபை சின்னையா
சுண்டிக்குளி
—வழக்காளி

எதிராக

அவுரூன் யோசேப்பும் பெண் எலிசபேத்து
ருயப்பு கிறகோரியும் பெண் சிசிலியா
கரையூர் யாழ்ப்பாணம்,

எதிராளிகள்

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB/564-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ வைகாசிமீ 19உ சனிக்கிழமை பிற்பகல் 4மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

யாழ்ப்பாணம், கரையூரில் நீலன் குடி இருப்பு என்னும் காணி நீ. இ ¼ வீடும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும்.

எல்லை கிழக்கும் வடககும் றேட்டு

மேற்கு அந்தோனிப்பிள்ளை பெண் சிசிலியாவின் ஆதனம்.

தெற்கு ஜேக்கப்பு பெண் கிளேருவின் ஆதனம்.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.
யாழ்ப்பாணம்,
29-3-56.

M 266 13-4- (த 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சின்னத்தம்பி விசுவலிங்கம் கைம்பெண் கனகம்மா சுண்டிக்குளி தனக்காகவும் தத்துவ வளக்கு No 1575 ல் தத்துவகாரியாகவும் —வழக்காளி

இல. MB 44 எதிராக

1. சின்னத்தம்பி செல்லையா கைம்பெண் தங்கரெத்தினம்

2. வடிவேல் நமசிவாயமும், இறிகேசன் ஆபிஸ், பாவற்குளம் வவோனியா,

3. பெண் விசெயலெட்சிமி விதானை ஒழுங்கை சுண்டிக்குளி

—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் MB 44 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹூ ஆனிமீ 5உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை பெரிய வளவு பர. நீல. இல. 1 - ம் குளி 5/8 செய்பயிர்களும் கிணற்றில் கால் பங்கும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் தருமலிங்கத்தின் ஆதனம். வடக்கு றேட்டு மேற்கு வாய்க்கால் தெற்கு சொக்கலிங்கம் பெண் டெல்சியின் ஆதனம் இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி
கொமிஷனர்.
51, 4 ம் குறுக்குத்தெரு
யாழ்ப்பாணம்
9-4-56.

M 267, 13—4 (து 100)

# ஞானப்பிரகாசமுனிவர்

## ஆன் வதைக்கு அஞ்சி மறைந்த அறவோன்

### சைவத் தொண்டு பல புரிந்து சமாதி அடைந்த ஞானி

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை ஆதரவில் நாவலர் மண்டபத்தில் ௫-ம் நாள் (22-3-56) வியாழக்கிழமை ஞானப்பிரகாசர் திருநாள் கொண்டாடப்பட்டது. சைவத் திருவாளர் பொன் அப்புக்குட்டி அவர்கள் ஞானப்பிரகாச முனிவர் விரிவுரை நிகழ்த்தினர். சுருக்கம் பின்வருமாறு;

ஞானப்பிரகாசர் ஓர் சைவ சிகாமணி. 370 ஆண்டுகளுக்குமுன் திருநெல்வேலியில் பரம்பரையான சைவவேளாளர் மரபில் வந்தார். ஆறுமுக நாவலர் அவர்களின் மூதாதையருளொருவர். இவர் காலத்தில் இலங்கையை அரசாட்சி செய்த பறங்கியர் மதவெறியா லுந்தப்பட்டுப் பல சிவாலயங்களையும் சிற்ப மாளிகைகளையும் இடித்து ஒழித்தார்கள். இஃதன்றி ஒவ்வொரு குடியிலுள்ளவரும முறையாக ஒவ்வொரு பசுவைத் தங்கள் அதிகாரிக்கு மாமிச உணவிற்காகக் கொடுக்க வேண்டுமென்று கட்டளை பண்ணியிருந்தனர். ஞானப்பிரகாசர் முறை வந்தது. சைவத் தவநெறியல்லா நெறி பவநெறியே அதில் தாம் வாழக்கிடைத்த பாக்கியத்தையும் அது போதிக்கும் புலால் மறுத்தலையும் தமக்கடுத்தவிடுக்கணையும் நினைந்து நினைந்து கண்ணீர் பெருக்கினர். "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கப் பிறிதின்னுயிர் நீக்கும் வினை" என்ற பொய்யா மொழியையும் சிந்தித்தார். பரமேசுவரனுக்கு அபிடேகப் பால் கொடுக்கும் பசுவை சிவசின்னமாம் விபூதிக்கு மூலகாரணமான பசுவை வதை செய்வதா? சைவத்துரோகமல்லவா என்று ஆறாத் துயரமுடையவராய் சைவசிந்தனை பொருமனத்துடனும் அந்த முறை நாளுக்கு முன்னிரவே ஊரை விட்டுப் புறப்பட்டு வேதாரணிய மார்க்கமாக இந்தியாவுக்குச் சென்றார். திருப்புகலூரில் முப்பொழுதும் திருமேனி தீண்டிப் பூசிக்கும் தவ முதல்வர் ஸ்ரீ பெரிய அண்ணுசாமிச் செட்டியாரிடம் சிவதீக்ஷை பெற்றுச் சிதம்பரத்தை அடைந்தார். அங்கே தேவி உபாசனை புரிந்தார். பின்பு கௌடவங்காளதேசத்துக்குச் சென்றார்; அங்கே வடமொழிப் பண்டிதராம் ஓர் பிராமணச் சந்நியாசியாரிடம் தர்க்கம் மீமாஞ்சை வியாகரணம் கற்றார். தென்னாட்டுக்கு வந்து குன்றக்குடியில் சந்நியாசம்பெற்றுச் சிவாகமங்களைக் கசடறக் கற்றார். அம்மடத்திலிருந்தே தமிழில் சிவஞான சித்தியாருக்கு ஓர் சுருக்கமானவுரையையும் சமஸ்கிருதத்தில் பௌஷ்கர ஆகம விருத்தி சித்தாந்த சிகாமணி முதலிய நூல்களையு மியற்றினர். பிறகு சிதம்பரம் வந்து சிவகாமசுந்தரி கோயிற்றிருப்பணி செய்வாராயினர். பின்பு தமக்குக் கிடைத்த புதையலைக் கொண்டு ஞானப்பிரகாசம் குளத்தையும் தம் பேரால் ஓர் மடத்தையும கட்டுவித்தார். ஓர் பங்குனிப் பூசத்தில் நிஷ்டைகூடிச் சிவபதமடைந்தார். இவர் சமாதி மேற்படி குளததிற்குச் சமீபத்திலுள்ளது. இவருடைய திருவுருவம் சிவபுரி மடத்தில் இன்றும் வைத்துப் பூசிக்கப்படுகின்றது. இவருடைய குருபூசைகளைச் செய்வதும் இவர் இயற்றிய சைவ நூல்களை மக்கள் பயன்பெறப் பிரசுரிப்பதும் சைவர் கடமை.

இந்நிகழ்ச்சிகளிலிருந்து "தவத்தினிலுணர்தத" என்ற சைவசாஸ்திரப் பேருண்மையையும் "கல்லாநெஞ்சினில்லானீசன்" என்ற அருள் வாக்கை மேற்கொண்டு சாந்துணையும் கல்வி கற்கவேண்டும் என்பதையும் "கற்க கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத் தக" என்ற ஒழுக்கத்தையும், சைவந்தரும் பெரும் பேறுகளை அநுபவிக்கச் சிவதீக்ஷை பெற்றுக் கொள்ளவேண்டுமென்பதனையும், சைவ விரதநோன்புகளை மேற்கொள்ளவேண்டிய பண்பையும் பதிபுண்ணியப் செய்யவேண்டுமென்ற பெருந் தவநெறியையும் காணலாம். மேலும் திருஞானசம்பந்தர் வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத்துறைவிளங்கபூத பரம்பரைபொலிய வழுதார் இவர் பசு ஓம்பல் வாழ்கவென்றழுதார். ஆனினம் அறியாதார் கையில் இக்காலத்தில் சிக்கி அல்லோலகல்லோலப்படுவதைச் சைவர்கள் நீக்கிச் சிறந்த முறையில் அவைகள் போற்றப்பட முயற்சி செய்ய முன்வர வேண்டும். இப்பணிகளில் பங்கு பற்றி இவ்வாருயிர்க்கு நிலை தேட முன்வந்துய்வோமாக.

---

### மனிலால் காந்தியின் மறைவு

மகாத்மா காந்தி அவர்களின் மூன்றுவது புதல்வர் ஸ்ரீ. மனிலால் காந்தி அவர்கள் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார் என்று துக்கசெய்தி ஒன்று வெளிவந்திருக்கின்றது. இவருக்கு வயசு 64. சென்ற சில காலமாக இவர் நோய் வாய்ப் பட்டிருந்தார். தென் ஆபிரிக்க இந்திய மக்களின் நிலைமையைத் திருததுதற்கு இவர் தமது வாழ்க்கையை அர்ப்பணஞ் செய்திருந்தார் என்பது குறிப்பிட வேண்டியது.

---

# பெண் கல்வி

---0---

## எங்கள் கலாசாரத்துக்கு ஏற்றதாதல் வேண்டும்

திருச்சி சிதாலக்ஷ்மி இராமசாமி கல்லூரி வருடாந்த விழாவிலே இளைப்பாறுகின்ற இந்திய உயர் நீதிமன்றப் பிரதம நீதிபதி ஸ்ரீ எம். பதஞ்சலி சாஸ்திரி அவர்கள் தலைமை வகித்துப் பேசுயபோது, எங்கள் ஒழுக்க கலாசாரமுறைகளுக்கமையும் தன்மையில் கல்வி கற்பிக்க வேண்டிய அவசியத்தை, பெண்கல்வி விருத்திக்காக உழைப்போர் தங்கள் சாதனைகளில் செய்து காண்பிக்க வேண்டும். இப்பொழுது பெண் பிள்ளைகளுக்கு ஊட்டப்படும் உயர்தரக் கல்வி எங்கள் கலாசாரத்துக்கு ஏற்றதாயிருக்கின்றதாஎன்பது பற்றிச் சந்தேகப் படுகின்றேன். அவர்கள் உத்தியோகம் பெறுவதைப் பற்றி நான் சிந்திக்கவில்லை. கலாசாரம் பற்றிய எண்ணமே என் மனத்திலிருப்பது இற்றைவரையில் ஆங்கிலக் கல்வியானது மாணவரை மேல் நாட்டு முறையில் நினைக்கவும் வாழவும் செய்துவிட்டது. அதனுல் எங்கள் நாட்டு மக்களுடன்கலந்துவாழாது மாணவர் வேறாக வாழ்ந்து வருகின்றனர். மேல்நாட்டுக் கலவியானது பெரும்பான்மையும் உலோகாயதவாழ்க்கை முறையையே சார்ந்ததாகும். இவ்வித கலாசார மாறுபாடானது அரசியல் அடிமைத்தனையிலும்கூடிய தீமை விளைப்பதாயிருக்கின்றது. அரசியற் சுதந்திரத்தைப் பெற்றுவிட்டோம். ஆனல் கலாசாரத் துறையில் சுதந்திரம் பெருது பின்னணியில் நிற்கின்ேரும்.

இத்தகைய நிலைமையிலே கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் மேலே குறிப்பிட்ட முறையில் கல்வி கற்பிப்பதனல் அதன் விளைவு பாரதூரமான பிழையாய் வரும். அநுபவத்தில் பார்த்தால் ஆண்பிள்ளைகளிலும் பார்க்கப் பெண்பிள்ளைகள் மேல்நாட்டுப் பளபளப்பு முறைகளைக் கூடிய அளவுக்குக் கைக்கொள்ளுகிறார்கள். ஆகையினலே பெண்கல்வி முன்னேற்றத்துக் குழைப்பவர்கள், கல்லூரிகளிலும் சர்வகலாசாலைகளிலும் ஊட்டப்படும் கல்வி, எங்கள் ஒழுக்கமுறை கலாசாரம் என்பவற்றை முழுதுந் தழுவியதாயமையககூடியவாறு நிச்சயப்படுத்த வேண்டும் என்று கூறினர்.

---


# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

616313,00

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந் தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் நூரச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாசம் பாசமாகக் கொடுக்கலாம்,

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-49.


---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம வேள்வி மல்க
மேன்மைகொள சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில, யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245-ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னையபலம் கர்த்தயா அவர்களால் 13-4-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

---

### ஐக்கிய தேசியக் கட்சி செய்வது என்ன?

முதல் மந்திரி சேர். ஜோன் கொத்தலாவல ஐக்கியதேசியக்கட்சி மந்திரிசபையாரைக் கந்தாவளைத் தோட்டத்துக்கு அழைத்து தேர்தல் முடிவுகளின் நிலைமையைக் குறிப்பிட்டு, புதிய அரசாங்கத்தில் ஐக்கியதேசியக்கட்சி செய்வது என்ன என்பதுபற்றி ஆலோசித்தாராம். அப்படி ஆலோசித்தபின் நிலைமைக்குத் தகுந்தபடி புதிய அரசாங்கத்துக்குச் சாதகமாகவோ பாதகமாகவோ ஐ தே. கட்சியார் யாவரும் ஒருமித்து வாக்களிப்பதாகத் தீர்மானித்தார்களாம்.

---

### காஷ்மீர்பற்றி நேரு முழக்கம்

காஷ்மீர்ப் பிணக்கு ஐக்கிய நாட்டுச் சபைக்குக் கொண்டு போகப்படும் என்று பாக்கிஸ்தான் அரசாங்க அதிகாரிகள் சொல்லுகின்றனர்.

இது இப்படியிருக்க, அலகபாத்திலே பண்டித நேரு அவர்கள் பேசும்போது, காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட்டது. ஆகையினலே சட்ட முறைப்படியும் அரசியல் முறைப்படியும் அது இந்தியாவின் ஒரு பகுதியேயாகும். தளபதி புல்கானினும் ஸ்ரீ.குருஷேவும் இவ்வாறு இந்தியா கொண்டுள்ள கொள்கையைச் சரி என்று ஆதரிக்கிறார்கள். காஷ்மீர் இந்தியாவுடன் இணைந்துவிட்டது. அதுபற்றிப் பொதுசன வாக்கெடுப்பு என்ற கதைக்கு இனி இடமில்லை என்ற செய்தி பாக்கிஸ்தானில் எதிர்ப்பையுண்டாக்கியுள்ளதுதான் ஆனல் இச்சொல்லை வரவேற்கிற நாடுகளுமிருக்கின்றன.

காஷ்மீர்பற்றித் திடமான தீர்மானஞ் செய்யாது விடுவதால் அந்நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டு நிற்கும், காஷ்மீர் பிணக்குப்பற்றி மீட்டும் பேசத் தொடங்கினல் அதன் பலன் அந்நாட்டு மக்களுக்கு அழிவேயாகும். அசத் காஷ்மீர்மக்கள்பொருளாதார நெருக்கடியால் எல்லைகடந்து இந்திய காஷ்மீருக்குள் வர முயலுகின்றார்கள். அவர்கள் வருகையைத் தடுத்திராவிட்டால் இலட்சக்கணக்கானோர் இந்தப்பக்கம் வந்திருப்பார்கள். பயமுறுத்துதலினல் காஷ்மீர் விஷயம் மீட்டும் ஆராய்ந்து தீர்மானிக்க இந்தியா ஆயத்தமாயில்லை என்று கூறினர்.

—0—

### இந்திய எகிப்திய நட்பு உடன்படிக்கை

இந்திய எகிப்திய நாடுகளுக்கிடையில் நட்பு நிலவச் செய்யும் ஓர் உடன்படிக்கையை இரு நாட்டினரும் செய்துகொண்டார்களாம்.

# உங்கள் நக்ஷத்திரம்?

**எங்கள் சோதிடர்**

ஸ்ரீ ராதாகிருஷ்ண [illegible]

**[ இவ்வாரப் பலன்கள் 15—4—56 —— 28—4—56. ]**

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இவ்விரு வாரங்களும் மிகத் தளப்பமாயிருக்கும். வேலை கூடுதலாயிருக்கும். உமக்கு மனச் சமாதானமுமிருக்கமாட்டாது. இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. 27ம், 28ம் திகதிகளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பச் சிக்கல்கள் இன்னமும் நீக்கப்படாமலிருக்கும். பிதாவழி இனத்தவரால் தொந்தரவுகளுக்கிடமுண்டு சிறிது காலத்துக்கு ஒன்றையும் புதியதாய்த் தொடங்கவேண்டாம் செலவு கூடிக் கொண்டேயிருக்கும்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3,

ஒரு நல்ல காலம் பணநிலைமைகள் திருந்த வேண்டும். புது முயற்சிகள் கவனமாய்க் கையாளப்படவேண்டும் எதிரிகளுக்கு அழிவும் குடும்ப சமாதானமும் நிச்சயம்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

தனலாபம் நிச்சயம். ஆனால் குடும்பச் சூழலில் எல்லாம் நல்லாயில்லை. சிறுகருமங்கள் பற்றியும் நீர் தேவையில்லாமல் துன்பப்படுவீர். தேக சுகம் தொடர்ந்து திருப்தியில்லாமலே யிருக்கும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.

இந்தவாரம் இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு உம்முடைய எல்லாக் கருமங்களிலும் நீர் கவனமாயிருக்கவேண்டும். நீர் நீதியீனமாய்ப் பழிக்காளாக்கப்படக்கூடும் மற்றவர்களின் கருமங்களில் கைவைக்கவேண்டாம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

வியாபாரக் கருமங்களுக்கு நல்ல காலம் ஆனால் மனச்சமாதானமிருக்கமாட்டாது. நீர் முயன்று வேலை செய்யவேண்டும். செலவு கூடுதலாயிருக்கும்.

**துலாம்** சித்திரை 3. 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

முதல்காலைக் கவனமாய்க் கழிக்கவும் சுகவீனங்களுக்கிடமுண்டு. இவ்விருவாரமிருதி புதுக் கருமங்களுக்கு நல்லாயிருக்கும். தனலாபமும் நிச்சயம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம். கேட்டை.

16-ம் 17-ம் திகதிகள் கவனமாய்க் கழிக்கவும். நீர் அதிக எதிர்ப்பையும் கண்டனங்களையும் முன்னிடவேண்டி வரும். வாக்குவாதங்களைத் தவிர்க்கவும் சிறு அபாயங்களுக்கிடமுண்டு

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நீர் சண்டை தொடுக்க முந்துவீர். பெரும் சண்டைகளைத் தவிர்க்கவேண்டுமானால் நீர் உம்முடைய கோபத்தை அடக்க வேண்டும். 18-ம் 19-ம் திகதிகள் கவனமாய்க் கழிக்கவேண்டும். பணத்துறையில் நல்லவாரம்.

**மகரராசி** உத்தராடம் 2 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

இனத்தவர்களுடன் சண்டைகளுக்கிடமுண்டு. உமக்கு மனச் சமாதானமிருக்கமாட்டாது. இரகசியப் பகைவரால் இடைஞ்சல்களுக்கிடமுண்டு. 20-ம் 21-ம் திகதிகள் கவனமாய்க் கழிக்கவேண்டும். உத்தியோகத் துறையில் நல்லகாலம்.

**கும்பராசி** அவிட்டம் 3. 4ம் பாதம். சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

உம்முடைய சொந்தச் சிக்கல்கள் பல நீக்கப்படும். உம்முடைய திட்டங்களை முன்னேற்றுக. 22ம் 23-ம் திகதிகளுடன் 24-ந் திகதி காலையும் தவிர இவ்விரு வாரமும் நல்லாயிருக்கும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இனத்தவர்கள் உமக்கு அதிக கோபத்தை உண்டாக்குவர். காணிகள் காணிப் பொருள்கள் மூலம் இலாபங்கள் நிச்சயம் 24ந் திகதி பிற்பகலையும் 25-ம் 26-ம் திகதிகளையும் கவனமாய்க் கழிக்கவும்.